# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 8
23—7—49 சனிக்கிழமை | வீச்சு 47


# வீணர்களை விரட்ட வேண்டும்!

## வாலிபர்களே விரைந்தெழுங்கள்

"தர்மப் பிரபுவே! சாப்பிட்டு நாலுநாட்களாகின்றன; கண் பஞ்சடைத்திருக்கிறது, கைகால்கள் துவண்டு போகின்றன, காது அடைத்துக் கொண்டு போகிறது, மயக்கமாக இருக்கிறது, ஒரு கவளம் கிடைத்தால் உயிர்நிற்கும்."

பஞ்சையின் இப்பரிதாபக் குரலைக்கேட்க, அந்தத்தர்மப்பிரபுவுக்கு நேரம் உண்டா? அவருக்கு எவ்வளவோ தொல்லை எத்தனையோ அவசரமான ஜோலி, இந்தப் பிச்சைக் [illegible]ண்ணி, குறுக்கே நின்றால் அவர் தமது காரியத்தைக் கவனிக்காது இவனுக்கு உபசாரம் செய்யவா, தங்குவார்! அதோ பாருங்கள். அவர், எவ்வளவு கவலையுடன் காரில் உட்காருகிறார், கதவை இழுத்து அடிக்கிறாரே கேட்கிறதா சத்தம்! அவ்வளவு கோபம் அவருக்கு. எங்கே செல்கிறார் தெரியுமா! ஒரு பெரிய நஷ்டம் நேரிட்டு விட்டது அவருக்கு, அதற்காகவே அவசரமாக ஓடுகிறார். பதினைந்து ஏக்கரா நிலமும், பழயவீடுமாகச் சேர்த்து இவரிடம் கடன்பட்ட சோணகிரி கடன் தொகை (வட்டி அசல்) ஐந்தாயிரத்துக்கு, விக்கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுவதாகச் சொன்னான்; சரி என்றார். ஏகர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கக் கூடியபடி நிலத்தைத் திருத்தியமைத்து, மெஷின் வைத்து தண்ணீர் பாய்ச்சி, ஏதேதோ செய்ய வேண்டுமென்று எண்ணினார். பூரித்தார் ஆனால், ஓர்போட்டிவந்துவிட்டது. மற்றொரு பணப்பெட்டி இடையே நுழைந்து, 7000 தருவதாகக் கடனாளிக்குக் கூறினான், கடனாளி பிகுவானான், அவனை ஏதோ 100, 300 தருகிறேன் என்று கூறிச்சரிப்படுத்தவே, தர்மப்பிரபு, அவசரமாக செல்கிறார். அந்த நேரத்திலே அவருக்குள்ள தொல்லை எவ்வளவு என்று தெரிந்து கொள்ளாமல், பட்டினி கிடக்கும் அந்தப் பராரி, ஒரு கவளம் என்று கேட்டால், பிரபுவுக்குக் கோபம் பிறக்காதா கூறுங்கள்! தடிப்பயல்கள், எங்காவது கூலிக்குப் போவதுதானே, குளத்திலே விழுந்து சாகக்கூடாதோ என்று பிரபு கூறுகிறார், இவ்வளவு பெரிய சீமான் ஒருபிடிசோறு தரக்கூடாதா? அட ஆண்டவனே! இவனை இப்படிபடைத்தாய், என்னை இந்தக்கதியிலே விடுத்தாய்! என்று அந்தப்பராரி, பகவானிடம் முறையிட்டான்.

* * *

இரவு மணி எட்டு; அமாவாசை இருட்டு; சரிந்துபோன சாவடித் திண்ணையிலே, பராரிகள் மாநாடு கூடுகிறது. வறட்டுத் தலையன், மாநாட்டைத் திறந்து வைக்கிறான்.

"ஈவு இரக்கம் கொஞ்சமாவது இருக்குதா. தர்மசிந்தனை இருக்குதா? இப்படி ஏழைகள் செத்துமடியறாங்களேன்னு கருணை இருக்குதா? ஒரு வேளைச் சோத்துக்கு ஒன்பது காதம் சுற்றித் திரிகிறோம்; பார்க்கிறவனை எல்லாம் பகவானேன்னு கும்பிட்டு பல்லை இளிக்கிறோம், காலில் விழுகிறோம், கஷ்டத்தைச் சொல்லிச் சொல்லிக் கதறுகிறோம்; போடா! மூடா! தடியா! திருடா! போக்கிரி! முட்டாளே! என்று திட்டித் துரத்துகிறார்களே தவிர, ஐயோ பாவம் என்று சொல்லி மனமிரங்கி, தர்மம் செய்யணுமென்று ஒருவருக்கும் எண்ணம் வரவில்லையே. அட ஈஸ்வரா! ஈஸ்வரா! இவனுங்க கிட்ட ஏண்டாப்பா, இவ்வளவு சம்பத்து கொடுத்து எங்களை இப்படி ஓட்டாண்டியாக்கி, சாவடியிலே சாக வைக்கிறே. உனக்குக் கண்ணில்லையா?"

மாநாட்டுத் தலைவர் ஓர் மார்வலிக்காரன்; "ஆமாண்டா, ஈஸ்வரனுக்குக் கண் இருந்தா, என்னை ஏண்டா இந்தக் கதியிலே விடுகிறார். பஞ்சையா இருந்தாலும், இப்போது கூட நான், பூபறித்து மாலை கட்டி, ஆலமரத்துப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்து, குட்டி, தோப்புக்கரணம் போட்டுத்

துதித்துக் கொண்டு தானே இருக்கிறேன்; என் சக்திக்கேற்ற பக்தி செய்கிறேன்; வாரிக்கொடுத்து விட்டதா சாமி. போடா! சாமி கூட, சீமானாக இருந்தாத்தான் சிரிச்சு விளையாடிப் பேசும்! நாம் கூப்பிட்டா அதன் காதிலே ஏறவா போவுது? அதுக்குக் கண்ணுமில்லை, பேச வாயும் இல்லை" என்று வெளுத்து வாங்கினான். காலையிலே சீமானிடம் "சீப்பட்ட" பஞ்சை, "நாம், கேவலம் மனிதர்களைப்பார்த்து, கை கூப்பித் தொழுது, சாமி, புண்யவானே, என்று துதித்துப்பயன் இல்லை. பகவானைத் துதித்தால் பலனுண்டு. அவன் பெயரைப் பஜிக்க வேண்டும். அவன் கண்திறந்து பார்த்தால் நமது கஷ்டம் ஒரு விநாடியிலே காற்றாய்ப் பறக்காதா? என்று முடிவுரை கூறினான். ஜே! சீதாராம்! என்று கூவிக் கஞ்சாப் புகையைக் கெம்பீரமாக வெளியே அனுப்பிவிட்டு, வடநாட்டுச் சாது போல் வேடம் போட்டுக்கொண்டு தன் பிச்சைக்காரத் தொழிலை நடத்திவந்தவன் வந்தனங் கூறிய பின், மாநாடு கலைந்தது; அவர்கள் உறங்கலாயினர்.

* * *

பஞ்சை பிறகு, தன் தீர்மானத்தின்படி கோயில்கள் முன்பு சென்று, கோவிந்தா! முகுந்தா! கோபாலா! இரகுராமா! பாண்டுரங்கா! பக்தவத்சலா! பரந்தாமா என்று, பூஜித்து வரத்தொடங்கினான். கோயில்களிலே சேவைக்காக வரும், 'பக்தர்கள்' இந்தப் பஞ்சையின் பஜனையை மதித்தார்களென்று எண்ணுகிறீர்கள்? அவர்கள் மனதிலே எத்தனையோ விதமான குமுறல்! அவைகளைப் பற்றி ஆண்டவனிடம் முறையிட்டுப் பரிகாரம் கோரவும், கொந்தளிக்கும் மனதுக்கு நிம்மதி தேடவும் கோயிலுக்கு வரும் பக்தர்கள், கோபுர வாயிலிலேயே, குடல் வெளியே வரும் விதமாக பகவந் நாமத்தைக் கூவிக்கொண்டிருப்பவனிடமா நிற்பர், அவன் குறை கேட்பர், உபசாரம் புரிவர்! உள்ளே சென்று, இலட்சார்ச்சனை புரிந்து, ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! என்று துதிக்கவேண்டாமோ?

* * *

"ஓ! என்பக்தர்களே! இங்கே, நீங்கள், ஏதேதோ குறைகூறிக் கோரிக்கொள்கிறீர்கள். அங்கே கோபுரவாயிலிலே கூவிக்கிடக்கிறானே, அவன் அஷ்டஐஸ்வரியம் கேட்கவில்லை, வியாபாரத்திலே அமோகமான இலாபம் கிடைக்க வேண்டுமென்று கேட்கவில்லை, மூத்தமகனுக்கு ஜெமீன்தார் வீட்டிலே பெண்கிடைக்க வேண்டுமென்று கேட்கவில்லை, அவன் கேட்பது, அரைவயிற்றுக் கஞ்சி! அதைத் தீர்த்துவிட்டுப் பிறகு உங்களிடம் வருகிறேன் என்று ஆண்டவன் கூறுகிறாரா? இல்லை! அவர் திகைத்துநிற்கிறார், வாய்திறக்கமுடியாத வியப்புடன் நிற்கிறார், ஆச்சரியத்தால், அவருடைய உடல் ஸ்தம்பித்துக் கிடக்கிறது.

அடடா! இந்தக்கபட வேடதாரி என்னை எவ்வளவு அழகாக அர்ச்சிக்கிறான்! எனக்கு அபிஷேகம் ஆராதனை என்று கூறிப்பொருள் பறித்து, திரையிட்டு, நீரைத்தெளித்துச் சிலையை அவசரமாகத் தேய்க்கிறான். கையிலே ஏதேனும்வலியிருப்பின், என்மீது கடிந்துகொள்கிறான், காலால் மிதிக்கிறான் அப்பப்பா இவன் செய்யும் அக்ரமம் கொஞ்சமா! இரவுவந்ததும், எனக்கென்று பக்தர்கள் தந்த பிரசாதம், இவனுடைய சரசிகளுக்குப் போய்ச்சேருகிறதே! இதோ, பட்டைநாமம், துளசிமணி, பஞ்சகச்சம், எனும் பக்த வேடமணிந்து பச்சைமா மலைபோல் மேனி என்று பாடுகிறானே, இவன் இன்று காலையில் தான் கள்ளக் கையொப்பமிட்டான், இங்கே கசிந்துருகிக் கோரிக்கொள்கிறான். ஆஹா! இந்தக் கள்ளி, கணவனை ஏய்க்காத நாளே கிடையாது. இங்கே எவ்வளவு சுத்தம், என்ன பக்தி! என்று தன் எதிரே வருவோரின் இயல்புகளைக்கண்டு, இப்படிப் பட்டவர்கள் சர்வமும் தெரிந்தவர் என்றும் என்னைத் துதிக்கின்றனர், ஆனால், தாங்கள் செய்யும் தீய காரியம் எனக்குத் தெரியாதென்றும், கருதிக்கொண்டு, பூஜித்து என்னை ஏய்க்கப் பார்க்கின்றனர். என்ன துணிவய்யா இந்தப்பக்தர்களுக்கு" என்று ஆச்சரியப் பட்டுத் திகைத்து நிற்கிறார்.

பஞ்சை, பகலிலும் மாலையிலும், கோவிலை வலம் வருவதும் கும்பிடுவதும், உரத்த குரலிலே, பாடுவதுமாக இருந்து வந்தான்; ஆண்டவனுக்கு என் சத்தம் எட்டாமலா போகும் என்று எண்ணினான். ஒவ்வோரிரவும், சாவடியிலே, பஞ்சையைக் கேலி செய்யாத ஆண்டி கிடையாது; அவன் அலுத்தும் போனான். கடைசியில் ஓர் பயங்கரமான முடிவுக்கு வந்தான். அதை அவன் கூறினபோது, அந்த ஆண்டிகள் கைதட்டிக் கேலிசெய்தனர். அவன், மிக உறுதியுடன் இருப்பதை அவர்கள் அறியவில்லை.

நம்மைப்போன்ற மனிதப் பிறவியைத் தேவா என்று துதித்துத் துதித்து, வாழ்த்தி வாழ்த்தி, என் நாக்குத்தழும்பேறி விட்டது. மனிதரைப் பஜித்துப் பயனில்லை, மகேஸ்வரனைப் பஜிப்போம், அவர் தன் மகனிடம், இரக்கம் காட்டாமலிரார் என்று எண்ணி, நாக்குக்கு நிமிடமும் ஓய்வு தராமல் நாமாவளி பாடினோம், அவரோ நம் குறைதீர்க்க முன்வரவில்லை. என் வேதனைக் குரலைக் கேட்காத செவிகளை அறுத்துவிட வேண்டும் அல்லது, வியர்த்தமாக பஜித்து வரும் என் நாக்கையாவது துண்டித்தெறியவேண்டும். மற்றவரின செவியை அறுக்க என்னால் முடியாது; ஆண்டவனுக்குள்ளதோ, கருங்கற் செவி, அறுபடாது, உடைபடும், செய்வதோ சிரமம். அதைவிட, என் நாவைத் துண்டித்து விடுவதே சுலபம். எதற்கு எனக்கு இந்த நா? கீதம்பாடுகிறேனா? களிப்பு இருந்தால் தானே கானம்! "ஏ! எங்கேயடா மோட்டார் டிரைவர், கூப்பிடு அவனை" என்று அதிகாரமொழி பேசப் போகிறேனா? அரை இலட்சந்தான் இந்த ஆண்டு இலாபங் கிடைத்தது என்று இலாபக் கணக்குப் பேசப்போகிறேனா? அருமை மனைவியிடம் ஆனந்தமாகப் பேசுவேனோ, குழந்தைகளிடம் கொஞ்சுவேனோ? என்நாவின்வேலை இதல்லவே! தலைதெரிந்ததும், தர்மப்பிரபுவே! என்று சொல்லவும், பிச்சை கேட்கவும், கோயிற்படியிலே இருந்துகொண்டு கோவிந்தாஎன்று கூவவுந்தானே இருக்கிறது. இதற்கு ஒரு நா இருக்க வேண்டுமா என்று ஏதேதோ எண்ணினான், தன் நாக்கைத்துண்டித்து, கோயிற் படிக்கட்டிலேயே வீசி எறிவது என்று தீர்மானித்தான். இதை அவன் கூறினபோது, ஆண்டிகள் அவன் அது போலச்செய்தே விடுவான் என்று துளியும் எண்ணவில்லை, அவன் நாக்கைத் துண்டித்துக் கொண்ட செய்தி தெரிந்தபோது திடுக்கிட்டு, திருவோடு கீழே விழுவதையும் கவனியாது, "அடேடே பாவம், விளையாட்டுக்குப் பேசி

னான் என்று நினைத்தோம்; உண்மையாகவே நாக்கை அறுத்துக் கொண்டானே" என்று பரிதாபப் பட்டனர்,

* * *

**கலியுக அதிசயம். நாத்திகருக்கு ஒரு வெடிகுண்டு. ஆத்திகருக்கு ஓர் பூச்செண்டு.** கடவுள் இல்லை என்று பேசிக்கொண்டும், பக்திமான்களை தூஷித்துக் கொண்டும், பேய்க்குரல் கிளப்பும் பேர்வழிகள், இன்றுமாலை, கோபாலசாமி கோவில் முன்பு **பஞ்சபக்தர்** எனும்மகான், பரவசமே விட்டுத் தம் நாக்கைத் துண்டித்து, பகவானுக்குச் சமர்ப்பிக்கப்போகும் அபூர்வமான அற்புதகாட்சியை நேரிலேகண்டு பக்தியின் பெருமையை உணரலாம். ஆத்திகர்கள், கூட்டத்துடன் வந்து மேற்படி பக்தரைத் தரிசித்து பகவத் அனுக்கிரகம் பெறக் கோரப்படுகிறார்கள், இங்ஙனம் கோபாலசாமிகோவில் தர்மகர்த்தா கொடை கோவிந்தசாமி என்று அச்சிடப்பட்ட துண்டு நோட்டீசுகள் ஊரிலே ஆயிரக்கணக்கிலே வீசப்பட்டன. தெருவுக்குத்தெரு கூட்டம் சேர்ந்து விட்டது. இத்தகைய பக்திமான் யாரோ என்று ஒவ்வொருவரும் ஆவலுடன் கேட்டனர்.

மோசமும் வேஷமும் நிரம்பிய உலகம்! சூதும் வஞ்சனையும் சூழ்ந்த உலகம். அகந்தையும் அநியாயமும் தாண்டவமாடும் உலகம்.

மயக்கத்தையும் மருளையும், தரும் மதம். ஏழைஎளியவரை ஏய்க்க தந்திரக்காரன் தயாரித்தது இந்தப் போதை. தரகரும் தருக்கரும் தன்னலத்துக்காகத் தோண்டினர் இந்த நாசக்குழியை.

பணமெனும் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்வான், பாட்டாளியை வாட்டி வதைப்பான், பஞ்சாங்கத்தைக் கூட்டாளியாகக் கொள்வான் ஆள்வோனுக்கு அடிபணிவான், இவன் பெயர் சீமான்.

எதிர்க்கத் தெரியாத கோழை இங்கிதம் தெரியாதவாழை; இவன் பெயர் ஏழை!

கூடிப்பேசவும் கும்பிட்டுக் குமுறவும் உள்ள கூடம் கோயில். இதுவறியவர் சென்றுபார்த்துப் பயன்பெறாது வெளியே வரும் வாயில்! அக்ரமத்தைக் கண்டு அஞ்சி மெய் மறந்தவரே, ஆண்டவன். இவ்விதமான புது அகராதியின்படி பேசினான் பஞ்சை. தனக்குச் சோறுபோட மறுத்துக் கோபமாக மோட்டார் ஏறிச்சென்ற சீமானின் மாளிகைக்குச் சென்றான், வெறிகொண்டவன் போலத்தூற்றினான், வேலையாட்கள் பிடித்திழுத்துக்கட்டினர், கம்பத்தில். சவுக்கெடு! என்று சீறினார்சீமான். பயமின்றி சிரித்தான் பஞ்சை.

"இப்போது கேட்கிறதா உன் செவி, பேஷ்! இது தெரியாமல் இத்தனை நாள் தவித்தேனே! உன்னைப் பூஷித்தேன், துதித்தேன், அப்போது உன்செவி மந்தமாக இருந்தது! இப்போது என் மனம் மார உன்னைத் திட்டினேன், உன் செவிக்கு அது எட்டிற்று? சரி! சவுக்கெடுத்து உன் கை வலிக்குமளவு என்னை அடி! பசியைவிடவா சவுக்கு என்னை அதிகமாக வாட்ட முடியும். உன் கோபத்தைத் தணிக்கக்கூடிய அளவு அடிக்க உன் கரத்திலே வலிவு இராது. அதற்கு எவனாவது ஓர் முரட்டு ஆளைப்பிடி! வேறோர் ஏழை அகப்படுவான், அவனைவிட்டு என்னை அடி, அதற்கு அவனுக்குக் கூலி கொடு.' என்று பஞ்சை பேசினான், பயமின்றி. அவனுக்குப் பித்தமோ என்று சீமான் சந்தேகித்தான். வேலையாட்களை வெளியே அனுப்பிவிட்டு விசாரித்தான். அந்த ஏழை தன் வேதனையான வாழ்வையும் நாக்கை அறுத்துக் கொள்ளப் போகும் விஷயத்தையும் சொன்னான், சில விநாடி, சீமான் மௌனமாக இருந்தான். ஓர் முடிவுக்கு வந்தான், கட்டுகளை அவிழ்த்தான். பஞ்சையை மாளிகை மேன் மாடிக்கு அழைத்துச் சென்றான். வீட்டினர் ஆச்சரியப்பட்டனர். பஞ்சையே ஆச்சரியப்பட்டான்.

அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது, ஆடை தரப்பட்டது, ஆயாசம் போக்கப்பட்டது, அதற்குப் பிறகு, சீமான் பஞ்சையை அருகில் அமரச் செய்து உண்மையாகவா நீ, நாக்கை துண்டித்துக் கொள்ளப்போகிறாய்?" என்று கேட்டான்.

"உண்மைதான். எனக்கு, நாக்கு இருந்து பயன் என்ன? அது இருப்பதால், நான் உன் போன்றவர்களைத் துதிக்கவும், துயர் வரும்போது தூற்றவும் முடிகிறது. வேறென்ன முடிகிறது? ஆகவே அதனை இழக்கத் துணிந்து விட்டேன்." என்றான் பஞ்சை. சீமானின் முகம் சந்தோஷத்தால் ஜொலித்தது. ஒரு வருஷத்திலே ஒரு இலட்சமாவது சேர்த்திட முடியும்! உன்னதமான மடம் ஏற்படுத்த முடியும்! நமது செல்வாக்கு முழுவதும் பயன்படும்" என்று தனக்குள் கூறிக்கொண்டு, பஞ்சையை நோக்கி, "சரி! நீ இக்காரியத்தைச் செய்து ஒரு பலனும் பெறாதிருப்பதைவிட, நல்ல பலன் உண்டாகும் விதமாகச் செய்கிறேன். என் சொற்படி நடந்தால், நீ சுகமாக இனி வாழ வழி செய்கிறேன்"—என்று கூறினான். பஞ்சை சரியென்றான், உடனே தான், துண்டு நோட்டீசுகள் ஊர் முழுதும் பரவின. குறிப்பிட்டநாளில் பஞ்சைதன்நாக்கைத் துண்டித்துக் கொண்டான். சீமான், ஆயிரக் கணக்கானவர்கள் முன்னிலையில், பஞ்சையின் காலில் வீழ்ந்து; "பக்தரே! தாங்கள் இந்த அடிமையினைத் தங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்" என்று வேண்டிக்கொண்டான். பஞ்சை தலை அசைத்தான். பக்குவமான சிகிச்சைக்குப் பிறகு, **பஞ்சபக்தர்** எனும் திருநாமத்துடன், அவன், சீமான் மாளிகையில் தங்கினான். ஊர் திரண்டு வந்தது, காணிக்கை செலுத்த; அதனைச் சேர்த்துவைக்கும் சேவையிலே சீமான் ஈடுபட்டார். வேறு எந்தத் தொழிலிலும் கிடைக்காத "வருமானம்" நாக்கிழந்தாருக்குச்சீடராக இருந்ததால், சீமானுக்குக் கிடைத்தது. ஊரார், தன்னை ஓர் உத்தமன், பக்திமான், அவதார புருஷன் என்று பஜிப்பதும், நுனி துண்டித்துப்போன நாக்கைத் தரிசிக்க நாள்தோறும், காத்திருப்பதும், பாதத்தில் பணம் கொட்டுவதையும், பாலும் பழமும் படைப்பதையுங்கண்ட, பஞ்சைக்கு நெஞ்சு பதறிற்று. வேஷத்துக்கும் வஞ்சனைக்கும் எவ்வளவு மயங்குகிறது இவ்வுலகம் என்று எண்ணி ஏங்கினான். எவ்வளவு தந்திரமாகத் தன்னை உபயோகித்து அந்தச் சீமான் பொருள் திரட்டுகிறான் என்பது கண்டு மனம் பதறலாயிற்று. வேளைக்குச் சோறு, தங்க ஓர் ஆஸ்ரமம், உடுத்த பட்டாடை, வேலையாட்கள், இவைகள், நாவிழந்ததால் தனக்குக் கிடைத்தது, ஆனால், நாக்கிழந்தானை நர்த்தனம் செய்ய வைப்போன், பதினாயிரக் கணக்கிலே பணம் திரட்டுகிறான். என்ன பாதகம்! என்று

(10-ம் பக்கம் பார்க்க)

# பெரியாரும் நாமும் இனி ஒன்றுபடமுடியாது

## புரட்சிக் கவிஞர் கருத்துரை

பெரியாரின் நோக்கம் மணியை மணப்பது; சொத்துக்கு அந்தப் பேர்வழியை வாரிசாக்குவதுமட்டுமல்ல.

தமக்குப் பின் திராவிடர் கழகம் என்பதொன்று இருத்தல் கூடாது. அதன் சொத்து யாவும் தாம் விரும்பும் இடத்திற் சேர்த்துவிட வேண்டும் என்பதையுந்தான் அவர் நோக்கம். இதைத் தற்காலிகமாக மறைக்க பல சூழ்ச்சிகளை நடத்துவார். நம்புதல் தீமை பயக்கும்.

பெரியார் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முதலில் நம்மை அச்சுறுத்த எண்ணுகிறார். அதற்குத்தான் காங்கிரஸ் பிரபல பார்ப்பனர்களைக் கண்டு பேசுவதும் அவர்கள் தமக்கு ஆதரவாயிருக்கிறார்கள் என்று நமக்குக் காட்டுவதுமாகிய நாடகத்தை நடத்துகிறார்.

காங்கிரஸிலிருந்து வெளியேறிய போது இதே முறையில் தான் அப்போது செல்வாக்கி லிருந்தவர்களாகிய ஜஸ்டிஸ் பிரமுகர்களைக் கண்டு பேசினார் என்பது நமக்கு நினைவிருக்கிறது.

இனி எந்தக் காரணத்தாலும் பெரியாரைச் சேர்க்கக் கூடாது. சேர்ப்பதால் அவர் இழந்த கௌரவத்தையும் மீட்க முடியாது. நம் சுயமரியாதையையும் காத்துக் கொள்ள முடியாது.

இந்த உலகில், எந்த நாட்டில், எந்தத் தலைவர் "என் இயக்க மக்கள் அனைவரும் நம்பிக்கைக்குரியவர் அல்லர்" என்று இயம்பினார்?

தந்நலங்கருதி இயக்கத்திற்குத் தீமை சூழ்ந்தார் தலைவரேயாயினும் பொதுநலங்கருதி அறவே நீக்கினார் என்ற புகழ்கொள்க நம் இயக்கம்.

பெரியார் நீக்கப்பட்டால் இன்றினும் ஆயிரமடங்கு இயக்கம் நன்னிலை எய்தும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

---

# பெரியாரிடம் நம்பிக்கையை இழந்துவிட்டோம்!

## விடுதலைக்கும் இனி நன்கொடை கிடையாது!

### மதுரை திராவிடர் கழக முடிவுகள்

அண்மையில், மதுரை நகர திராவிடர் கழகம் கூடி கீழ்க்கண்ட முடிவுகளைச் செய்தது:—

1) பெரியாரின் பொருந்தாத் திருமண ஏற்பாட்டை இக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2) "விடுதலை" பத்திரிகை, பெரியாரின் இன்றைய விபரீதப் போக்கை ஆதரிக்கும் தன்மையதாக இருக்கும் காரணத்தால், விடுதலை ஜாமீன் நிதிக்காக வசூலிக்கப்பட்ட ரூபா 300 ஐயும் விடுதலைக்கு அனுப்பாமல், நன்கொடை வழங்கிய மக்களிடமே திருப்பித் தந்துவிடுவதென முடிவு செய்யப்பட்டது.

3) பெரியார் நம் அனைவரின் நம்பிக்கையையும் இழந்துவிட்ட காரணத்தால், திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, வேறு தக்க தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாறு இக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

——

---

# நம்மை அவமதித்த பெரியாரை நாம் வரவேற்க முடியாது

## உடுமலை திராவிடர் கழக நடவடிக்கை

ீ உடுமலை வழக்கு சம்பந்தமாக உடுமலைப் பேட்டைக்குப் பெரியார் செல்லுமுன்பே, உடுமலை திராவிடர் கழகம் கூடி, கழகக் கொள்கைகளுக்கு மாறுபட்ட முறையில், ல கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் திருமணம் செய்து கொண்டு, திராவிடர் கழகத்தை அவமானப்படுத்திய பெரியார் இங்கு வரும்போது அவருக்கு வரவேற்பளிக்கக்கூடாது என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

——

---

# எங்கள் வேண்டுகோள்

### மத்திய திராவிடர் கழக நிர்வாகக்குழுத் தலைவர்

## T, P. வேதாசலம் அவர்களுக்கு

ஐயா

சென்ற தடவை நம் கமிட்டிக் கூட்டம் கூடி எவ்வித முடிவும் இன்றி கலைந்தோம். பெரியார் திருமணமும் நடைபெற்று விட்டது. அதற்குப்பின் 13-7-49, விடுதலையில் பெரியார் வெளியிட்ட அறிக்கை, பிரச்சினையை மிகவும் சிக்கலாக்கி விட்டதுடன் இயக்கத்தில் பெரியாருக்குப் பிடித்தமில்லாத தலைவர்களை சதிவழக்கில் ஈடுபடுத்தக் கூடியதாக இருக்குமோ என்று பயப்படக்கூடிய அளவுக்குப் போய்விட்டது.

நாம் இதுவரை செய்த வேலைகள் எல்லாம் பயனற்றுப் போய் விடுமோ என்று பயப்படவேண்டியதிருக்கிறது. மக்களிடத்தில் ஏற்பட்ட உற்சாகம் குன்றி கட்சி சிதைந்து போய்விடவும் கூடும். ஆகையால் நம்முடைய கமிட்டியைச் சீக்கிரம் கூட்டி ஏதாவது முடிவு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடு உடனே செய்யக் கோருகிறோம்.

**சொ நீதிமாணிக்கம்**

தூத்துக்குடி.

**ஏ. வி. பி. ஆசைத்தம்பி,**

விருதுநகர்.

மத்திய திராவிடர் கழக நிர்வாக குழு உறுப்பினர்கள்.

இந்த நகல் எல்லா நிர்வாக உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

20-7-'49

---

## 'தீ'

பல அசந்தர்ப்பங்களால் இவ்வாரம் 'தீ' வெளிவராது. அடுத்த வார முதல் ஒழுங்காக வெளியிடப்படும்.

# "போர்வாள்" கண்டு மலாய் சர்க்கார் நடுக்கம்!

## அன்பர் அம்பலவாணனுக்கு ஐந்துமாத கடுங்காவல்!

### நேர்மை தவறிய சர்க்காரின் நீதி தவறிய நடத்தை!

பாட்டாளிகளின் தலைவன் கணபதிக்கு சிலாங்கூர் சுல்தானால் அநியாயமாக விதிக்கப்பட்டமரண தண்டனையைக் கண்டித்து "மரணத்தின் அழைப்பு—மறுபடியும்!" என்ற தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கத்தைத் தாங்கி வெளிவந்த 14-5-49 "போர்வாள்" இதழினை விற்றதே குற்றம் என்று கூறி, மலாய் சர்க்கார், போர்வாள் இதழின் கோலாம்பூர் விற்பனையாளரும், மலாய் திராவிடர் கழக பிரபலஸ்தருமாகிய **தோழர் அம்பலவாணன்** அவர்கள் மீது வழக்குத் தொடுத்தனர். வழக்கை "விசாரித்த" மலாய் செஷன்ஸ் ஜட்ஜ், சென்ற வாரம், தோழர் அம்பலவாணனுக்கு 5 மாத கடுங்காவல் தண்டனையும், 750 டாலர் அபராதமும் விதித்துள்ளார். கொடுமை! கொடுமை! நியாயத்தை எடுத்துக் காட்டிப் பேசிய பத்திரிகையை விற்றதற்குத் தண்டனை 5 மாத கடுங்காவல் என்பது மிகப்பெருங் கொடுமை! வீழ்க மலாய் சர்க்காரின் விபரீத நடத்தை! வாழ்க நியாயத்தின் பக்கம் நிற்கும் தோழர் அம்பலவாணன்! வாழ்க அவர் தீரம்! வெல்க அவர் தொண்டு!

—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் இனியும் அவரையே தலைவராக ஏற்றுக்கொள்வது என்பது இயக்கவளர்ச்சியில் அக்கறையுடைய எந்தக் கழகத்தோழராலும் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கருத்து.

இவ்வளவு தூரம் நிலைமை வளர்ந்து விட்டபிறகும் கூட, திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர் **தோழர் வேதாசலம்** ஏன் இன்னமும் நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி நிலைமையைப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வர கமிட்டி உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் வசதியும் செய்து தராமல் இருக்கிறார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

என்ன காரணத்தால் அவர், இதுவரை கமிட்டியைக் கூட்டாமல் இருந்திருந்தாலும் சரி, தோழர்கள் ஆசைத்தம்பி—நீதி மாணிக்கம் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க, இனியேனும், உடனடியாக கமிட்டியைக் கூட்டுவார், கூட்டி, கழகத்திற்கு நேர்ந்துள்ள அவமானத்திற்குப் பரிகாரம் தேடுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

ஒருக்கால் நண்பர் வேதாசலம், தன்னைப் பொறுத்தவரை, பெரியாரின் போக்கு முற்றிலும் சரி என்று நம்புவதாக இருந்தாலும் கூட, அதற்காக அவர் கமிட்டியைக் கூட்டாமல் இருப்பது என்பது சிறிதும் முறையாகாது.

ஒரு வேளை, அவருக்கு, கமிட்டியைக் கூட்ட விருப்பமில்லாதிருந்தால், அதையும் வெளிப்படையாகத் தெரிவித்து விடட்டும். பிறகு, சட்டப்படி, முறைப்படி, கமிட்டியைக் கூட்டுவதற்கு என்னசெய்ய வேண்டுமோ, அதனை மற்ற நிர்வாக உறுப்பினர்கள் செய்யட்டும்.

இப்போதுள்ள 'இரண்டும் கெட்ட' நிலையிலேயே கழகத்தை இனியும் இருக்கவிடுவது நல்லதல்ல. உடனடியாக கமிட்டி கூடினால் ஒழிய நிலைமை மேலும் விபரீதமாகவும் சிக்கலானதாகவுமே மாறும். கமிட்டி கூடி, வழி காட்டத் தவறினால் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய வழியிலே நடக்க முனைவர்—கழகம் சிதைந்து விடும்; எனவே உடனே கமிட்டியைக் கூட்ட வேண்டியது கமிட்டித்தலைவர் தோழர் வேதாசலத்தின் கடமை.

—

## நடராசன் வேண்டுகோள்

பேரன்புடையீர், வணக்கம்

யான், மீண்டும், "திராவிடன்" வார இதழைத் துவக்கி அதன் மூலம் தொடர்ந்து தொண்டாற்றுவதென உறுதிகொண்டு துவக்க ஏற்பாட்டைச்செய்தும்வருகிறேன்.

ஆனால், இன்றுள்ள நிலையில் அச்சகக் கூலியை சரி செய்வதென்பது மிகக் கஷ்டமாயிருப்பதால் "திராவிடன்" மேலால் தொடர்ந்து வாரந்தோறும் தவறாமல் வெளி வருவதற்கான முறையில், **மிகச்சிறிய அச்சகம்** ஒன்று அமைத்து, தொண்டாற்ற முற்பட்டுள்ளேன்.

எனவே, இது சமயத்தில் எனது வேண்டுகோளை, தாங்கள் ஆதரித்து, (அதிக தொல்லையில்லாத அளவில்) உடனே பொருளுதவி செய்து எனது முயற்சிக்குப் பேராதரவு, அளிக்கப் பணிவாய்வேண்டிக்கொள்கிறேன்.

**என். வி. நடராசன்.**

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 8
23—7—49 சனிக்கிழமை

# எழுதுகிறார்! எழுதுகிறார்! பெரியார் எழுதிக்கொண்டே இருக்கிறார்!

எழுதுகிறார்!

மீண்டும் எழுதுகிறார்!

மறுபடியும் எழுதுகிறார்!

மீண்டும் மீண்டும் எழுதுகிறார்!

திரும்பத் திரும்ப எழுதுகிறார்!

"குடி அரசு" இதழில் தலையங்கமாக ஒரு நாளைக்கு எழுதுகிறார்!

"விடுதலை" பத்திரிகையில் கட்டுரையாக ஒரு நாளைக்கு எழுதுகிறார்!

ஈ. வெ. ரா. குறிப்பு என்ற தலைப்பிட்டு ஒரு சமயம் எழுதுகிறார். குறிப்பை அறிக்கை என மாற்றி மற்றொரு சமயம் எழுதுகிறார்!

விளக்கம் கேட்ட தோழர்களுக்கு என்ற வேண்டாவெறுப்புத் தொனியுடன் ஒரு நேரத்தில் எழுதுகிறார்! "இன்னமுமா விளக்கம் தேவை?" என்று, ஏதோ எல்லா விளக்கமும் தந்துவிட்டதைப் போலப் பாவனை செய்து கொண்டு மற்றொரு நேரத்தில் எழுதுகிறார்!

"நான் திருமணமா செய்து கொள்ளுகிறேன்—இல்லை இல்லை—எனக்கெதற்குத் திருமணம் இந்த வயதில்—திருமணம் அல்ல நான் செய்து கொள்வது, திருமணம் என்ற பெயரில் ஓர் ஏற்பாடு!',—**இப்படி, ஒரு நாள்!**

"இந்தத் திருமணத்தைப்பற்றித் தானே பேசுகிறீர்கள்? பொருத்தமான திருமணம், மிகப் பொருத்தமான திருமணம், மிக மிகப் பொருத்தமான திருமணம், தம்பதிகள் இருவரும் மனம் ஒப்பிச் செய்து கொண்ட திருமணம்—இதுவா பொருத்தமற்ற திருமணம் — யார் கூறியது அப்படி?"—**இப்படி, மறுநாள்!**

"எனக்குப் பின், **கட்சிக்கும்**, என் சொந்தத்திற்கும் வாரசு ஏற்படுத்த வேண்டும். இதை விரைவில் செய்யப் போகிறேன்!"—**இந்தவிதமாக ஒரு சமயம்!**

"கட்சிக்கு வார்சு ஏற்படுத்துவதாக நானா சொன்னேன்? செச்சே, அதெல்லாம் சுத்தப் பொய்! விஷமிகளின் வீண் பிரசாரம்!"—**இந்த விதமாக மற்றொரு சமயம்!**

திருமணம் முற்றிலும் சொந்த விஷயம்—**பெரியாரின் பொன்மொழி சென்னையில் இருக்கும்போது!**

"இயக்க நலனுக்காக, இயக்க வளர்ச்சிக்காக, இயக்கம் நிலைத்து நிற்பதற்காக நான் ஓர் ஏற்பாடு செய்து வருகிறேன். அந்த ஏற்பாட்டின் ஒரு பகுதியே திருமணம்!" — **பெரியாரின் பொன்மொழி மறுநாள் ஈரோட்டுக்குச் சென்ற பிறகு!**

சுயநலமிகள்! எதிரிகள்! விஷமிகள்! கண்டபடி உளறிக் கூத்தாடுபவர்கள்! சதிகாரர்கள்! சூதர்கள்! பொதுமக்களால் உஷாராகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள்!—"விடுதலை"யில் தலையங்கம் எழுதும்போது, பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கண்டு உள்ளம் நொந்து போயிருக்கும் ஆயிரமாயிரம் திராவிடர்களுக்கு, பெரியார் தரும் இலட்சார்ச்சனை, இவ்வண்ணம்!

"யாரை, கூட்டமாகவோ, தனிப்பட்ட முறையிலோ குறை கூறியிருக்கிறேன், யாரை ஏசியிருக்கிறேன், யாரை நான் இழிவாகக் கூறியிருக்கிறேன்"—"குடி அரசு" ஏட்டில் தலையங்கம் எழுதும்போது, அதே பெரியார், அதே பேனாவால் எழுதும் வாசகம் இவ்வண்ணம்!

"மணியம்மையார் என்ன சின்ன குழந்தையா? அவர்களின் சம்மதமின்றியா இந்தத் திருமணம் நடந்து விடும்"—ஒரு சமயம், இப்படி!

"மணி அம்மையாருக்கு, தான் கையெழுத்துப் போடுவது திருமண ஏற்பாட்டிற்காக என்பதே தெரியாத நிலையில், அம்மையாரிடம் பதிவு மனுபாரத்தில் கையெழுத்து வாங்கினேன்."—மற்றொரு சமயம், இப்படி!

ஆம்! பெரியார் எழுதுகிறார், எழுதுகிறார், எழுதிக்கொண்டே இருக்கிறார்! ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு புது வியாக்யானம், ஒவ்வொரு வாரத்திற்கு ஒவ்வொரு புது தத்துவார்த்தம், ஒவ்வொரு சமயத்திற்கு ஒவ்வொரு புது "விளக்கம்" என்ற 'பாணி'யிலே அவர் எழுதுகிறார்—எழுதுகிறார்—எழுதிக்கொண்டே இருக்கிறார்!

அவர் தரும் ஒரு விளக்கத்திற்கு அவரே தரும் மற்றொரு விளக்கம் மாறுபாடாக இருக்கிறதே என்று வருந்துகிறோம் நாம். ஆனால் அவரோ அதைப் பற்றிக் கவலைப்படுவதாகவே காணோம்—புதுப் புது "விளக்கங்"களைத் தந்தபடி இருக்கிறார்!

ஒரு விளக்கமாவது, அவருடைய திருமணத்தால் மனம் புண்ணாகிக்

"மாலை மணி"

(திராவிடர் தமிழ்த் தினசரி)

★

ஆசிரியர்:

அறிஞர்

C. N. அண்ணாதுரை M. A.

★

4—8—49ல் வெளிவருகிறது

விலை அரை அணா

எல்லா ஊர்களுக்கும்
ஏஜெண்டுகள் தேவை

★

விவரங்களுக்கு:

"மாலைமணி" பதிப்பகம்,

2-45, முத்துமாரிச் செட்டித் தெரு
சென்னை 1.

# "விளக்கங்கள்" பல தருகிறார்! ஆனால் விளக்கம்தான் இல்லை!

டக்கும் திராவிடர் தம் உள்ளத்திற்கு ஆறுதல் தருவதாயில்லை. ஒரு வியாக்யானமாவது, அவருடைய தகர்ச் செயலாலே தலை குனிந்தபடி நடக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்ட இயக்கத் தோழர்களுக்குக் களிப்பு ஊட்டுவதாயில்லை. ஒரு தத்துவார்த்தமாவது, அவர் செயல் சரியானதுதான், முறையானதுதான், நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதுதான் என்ற எண்ணத்தை நம் உள்ளத்தில் ஊன்றுவதாயில்லை.

என்றாலும் அவரும் விளக்கம் தரும் பணியை விட்டுவிடுவதாகக் காணோம்—விளக்கம் தரா விளக்கங்கள் வந்தபடி இருக்கின்றன, ஒவ்வொன்றாக! ஒவ்வொரு நாளாக!

பெரியார் அவர்கள் தந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு விளக்கத்தாலும் ஒவ்வொரு புது சிக்கல், ஒவ்வொரு புது மனவருத்தம், ஒவ்வொரு புது வேதனை ஏற்படுகிறதே தவிர, அந்த விளக்கங்களாலே விளக்கம் மட்டும் ஏற்படுவதே இல்லை.

திருமணம் செய்து கொள்வது திருமணத்திற்காக அல்ல! சொத்துக்களை என் காலத்திற்குப் பின்னால் நிர்வகிக்க வார்சாக ஓர் ஆள் வேண்டாமா, அந்த வார்சு நியமிக்கும் முறைதான் இத்திருமணம் என்று, பெரியார், ஒரு முறை விளக்கம் தந்தார்.

உடனே, எல்லோர்க்கும், 'சொத்துக்களை ஒருவர், மற்றொருவரிடம் ஒப்படைக்கவேண்டுமானால், சொத்தைத் தருபவர் சொத்தைப் பெறுபவரை மணந்துகொண்டுதான் ஆகவேண்டும், என்பது துளியும் அவசியமில்லையே! உயில் எழுதுவது, தானம் செய்வது முதலிய எத்தனையோ வழிமுறைகள் உண்டே! இந்த விளக்கம் சிறிதும் பொருத்தமானதாக இல்லையே!" என்றுதான் தோன்றிற்று.

"மணியம்மையாருக்கு வயது இப்போது 3 ! அம்மையார்பக்குவமடைந்த வயது 16 அப்போதே அவருக்குத் திருமணமாகியிருந்தால் இந்நேரம் அவருக்கு ஒரு பேரன்கூட பிறந்துவிட்டிருப்பான் எனவே இவ்வளவு வயதான அம்மையாரை வயதான நான் மணந்துகொள்வது எப்படிப் பொருத்தமற்ற திருமணமாகிவிடும்?" என்று பெரியார் மற்றொரு சமயம் விளக்கவுரை பகர்ந்தார்.

இதைக்கேட்டவுடன், "இதே வாதப்படி பார்த்தால், பெரியாரின் 15 வது வயதில் அவருக்கு மணமாகி ஒரு மகள் பிறந்திருந்தால், அவருடைய 29 வது வயதில் அவருடைய அந்த மகளுக்கு ஒரு மகள் பிறந்திருக்கக்கூடுமே, அந்தப் பேத்திக்கு 14 வயதாகும்போது பெரியாருக்கு 44 வயதிருக்குமே, 14 வயதில் அந்தப் பேத்திக்குத் திருமணமாகியிருந்தால், இப்போது, பெரியாருக்கு 28 வயதுடைய ஒரு கொள்ளுப் பேத்தி இருக்குமே, மணியம்மையாரின் வயது ஏறத்தாழ அதுதானே, எனவே பெரியாரின் வாதம் சரியானால் அம்மையார் பெரியாருக்கு கொள்ளுப் பேத்தி முறைதானே வேண்டும்?" என்று தான் நமக்கெல்லாம் தோன்றிற்றே தவிர, பெரியாரின் விளக்கம் சிறிதும் நமக்குத் திருப்தி தருவதாயில்லை.

என்னைக் கொலை செய்யச் சிலர் சதி செய்தனர். இது எனக்குத் தெரிந்தவுடனே தான் நான் பயந்து, அவசரப்பட்டு, திருமணத்தைச் செய்துகொண்டுவிட்டேன் என்று வேறொரு சமயம் புது விளக்கம் புரிந்தார். இந்த விளக்கத்தை




அமெரிக்காவுக்கு இந்தியாவின் தூதராகச் சென்றிருப்பவரும், முதலமைச்சர் நேருவின் சகோதரியுமாகிய தோழியர் விஜயலட்சுமி பண்டிட், இந்தியாவுக்கு அமெரிக்கா 300 கோடி டாலர் கடனைக் கொடுத்துதவ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்தியாவில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை வலுவடையச் செய்வதற்கு இதைவிட அருமையான வாய்ப்பு வேறு ஏது என்று எண்ணிக் களிக்கிறார் ட்ருமன்.

# கட்சி, விலைக்கு வாங்கும் பொருளா?

"விடுதலை"யில் கண்டதும், கொலை செய்யத் சதி நடந்தது ஒருக்கால் உண்மையாயிருந்தால் உடனே போலீசுக்குப் புகார் செய்யவேண்டியதுதானே கடமை, கொலையை திருத்த வழி திருமணமா என்று தான் நல்லறிவாளர்கள் அனைவரும் எண்ணினரே தவிர இந்த விளக்கத்தைக் கண்டு பெரியாருக்குத் திருமணம் தேவைதான் என்று எவரும் தலை அசைத்துவிடவில்லை.

கட்சிக்குள்ளாகவே, பலர், பலகாலமாகவே, என்னைக் கவிழ்ப்பதற்காக இரகசியத்தில் திட்டமிட்டு வேலை செய்துவந்தனர் எனவேதான் நான் இத்திருமணம் புரிந்து கொண்டேன் என்று இன்னொரு சமயம் பெரியார் புது வியாக்யானம் ஒன்றைக் கண்டுபிடித்துக் கூறினார். இதைக் கேட்டதும், மாற்றுக் கட்சியினர்கூட, "கட்சியிலே சிலர் இவர்தம் தலைமையை வீழ்த்தத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தது உண்மை என்றே வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும்கூட அதற்குப்பரிகாரம், மீண்டும் கட்சித் தலைவர் தேர்தலை நடத்தி, தன்னிடமே கட்சி மக்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்பதை பெருவாரியான ஓட்டுகள் பெறுவதன்மூலம் நிரூபித்துக் காட்டுவதுதானே தவிர திருமணம் செய்து கொள்வது எப்படி அதற்குப் பரிகாரமாகும்?" என்றுதான் கேட்கலாயினர்.—விளக்கம் கண்டு, ஆஹா அற்புதம் அற்புதம் என்று 'கரகோஷம்' செய்துவிடவில்லை.

கடைசி கடைசியாக, பெரியார், அவர் இதுநாள்வரை கூறிவந்த இந்த அர்த்தமற்ற வாதங்கள் அத்தனைக்கும் சிகரம் வைத்ததுபோல திருமணம் ஏன் என்பதற்குப் புத்தம் புதியதோர் தத்துவார்த்தம் புகன்றிருக்கிறார்—சென்ற வாரத்துக் "குடியரசு" இதழ் மூலம்!

அது, இது:—

"இயக்கத்தில், பெரியார் தொண்டு இன்னது என்பது யாருக்கும் தெரியும். அப்படிப் பட்ட தொண்டை அவருக்குப் பிறகும் செய்ய ஓர் ஏற்பாடு செய்கிறேன், அதற்கு வாரசு வேண்டும் என்கிறார் பெரியார். ஏன் வார்சு வேண்டும்? அந்தத் தொண்டை நடத்த! எப்படி நடத்துவது? பண்டு Fund வைத்து நடத்துவது...... இந்தஏற்பாட்டுக்கும் கழகத்திற்கும் சம்பந்தமே இருக்காது......எப்படி என்றால் கழகத்திற்கு யார் வேண்டுமானாலும் தலைவராகலாம்; கழகம் எப்பேர்ப்பட்டவர் கைக்கும் போகலாம்; கழகத்தை இன்றைய போக்கில் யார் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கி எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம்...... அப்படிப்பட்ட நிலையில் டிரஸ்டும் நிதியும் சரிவர நடக்க வார்சு உரிமைதான் ஒரு காவலாக இருக்கும்."

பெரியார் அவர்களே, தம் சொந்தக் கையாலேயே, தாமாகவே தீட்டியுள்ள வாசகங்கள் தான் இவை! இந்த வாசகங்களின் உள்ளுறையை உணர்ந்து பார்க்கும் திராவிடர் கழகத் தோழர் எவர் உள்ளமும் பதறாமல் இருக்க முடியாது. நம்மைப் பொறுத்த வரையில், நாம், இந்த வாசகங்களைப் படித்தபோது, ஆயிரம் ஈட்டி முனைகளால் நம் உள்ளத்தை ஒரே சமயத்தில் குத்திக் குடைவதுபோன்ற அவ்வளவு வேதனை உண்டாயிற்று.

திராவிடர் கழகத்தை யார் வேண்டுமானாலும் தங்கள் பக்கம் திருப்பிக் கொள்வார்கள். அது எப்படி வேண்டுமானாலும் மாறிவிடும். தான் செய்து வரும் பணியை கழகம் எப்போதும் செய்யும் என்று நம்ப முடியாது. எனவே தன் பணியைத் தொடர்ந்து நடத்த, கழகம் இல்லாமல் வேறொரு அமைப்பு தேவை. அந்த அமைப்பின் வளர்ச்சிக்குத்தான் தன் சொத்து. அந்த சொத்தைக் காப்பாற்றுவதற்குத்தான் ஒரு டிரஸ்ட். அந்த டிரஸ்டிற்குக் காவல்தான் வார்சு. அந்த வார்சு தான் மணியம்மை. இதுதான் பெரியாரின் வாதம். இந்த வாதத்தின் தன்மையைக் காணும் திராவிடர் கழகத் தோழர்கள் எப்படி திடுக்கிடாமல் இருக்க முடியும்? எப்படி மனம் பதறாமல் இருக்க முடியும்? எப்படி வேதனை வேதனை என்று கூறி உள்ளம் குமுறாமல் இருக்க முடியும்?

தான் செய்துவரும் பிரசாரத்தை திராவிடர் கழகம் தொடர்ந்து செய்யாது என்று சந்தேகிக்கிறார் பெரியார்! ஆனால் மணியம்மையார் செய்ய முடியும், செய்வார்கள், என்று நம்புகிறார்! ஒரு மணியம்மையாரிடம் இருக்கும் அளவு நம்பிக்கை கூட திராவிடர் கழகத்திடம் இல்லை பெரியாருக்கு! மணியம்மையாரை நம்பு

அற்புத ஓவியம்! வெளிவந்து விட்டது!!

தமிழ்ப் பாசறையின் முதல் வெளியீடு:

தேவலீலைகள்!

அறிஞர் அண்ணாத்துரை தீட்டிய
சிறந்த ஆராய்ச்சிச் சித்திரம்

"கம்பரச"த்தைப் படித்து மகிழ்ச்சியும் தெளிவும்
— பெற்ற மக்களுக்கு மற்றுமோர் விருந்து —

"தேவலீலை"கள். விலை அணா 0—8—0

விற்பனை உரிமை:

அறிவுப் பண்ணை
6, மங்கம்மாள் தெரு, ஏழுகிணறு, சென்னை. 1.

இங்கும் கிடைக்கும்:

பகுத்தறிவுப் பாசறை
147, பவளக்காரத் தெரு, சென்னை. 1.

# நிர்வாகக் கமிட்டி உடனே கூடவேண்டும்

கிறார்! திராவிடர் கழகத்தை நம்ப மறுக்கிறார்! மணியம்மையார் ஆற்றக்கூடிய அளவு பிரசாரத்தைக்கூட கழகம் செய்யாது என எண்ணுகிறார்! கழகம் எதிர் காலத்தில் தன் இலட்சியங்களையே கூட மறந்துவிடும், அல்லது திசைமாறிப் போய்விடும் என்று கழகத்தை ஐயுறுகிறார் பெரியார்! ஆனால் அம்மையார் மட்டும் தன் இலட்சியங்களை மாற்றிக் கொள்ளமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறார்! தன் பணியை, கழகம் தொடர்ந்து செய்யாது — அதனைச் செய்ய வேறு ஓர் அமைப்பு தேவை என்கிறார்— அந்த அமைப்பை நிர்வகிக்க அல்லது காப்பாற்ற அல்லது காவல் புரிய மணியம்மையாரை நியமிக்கிறார் திருமணத்தின் மூலமாக! கழகத்தின் மீது அவநம்பிக்கை கொண்டு வேறு ஓர் ஏற்பாடு செய்கிறார்! இதைக் கழகத்தில் இருந்து கொண்டே செய்கிறார்! ஒரு தலைவர், தன் கட்சியை இதைவிட அதிகமான அளவுக்கு எப்படி அவமதிக்க முடியும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

கழகத்தை யார் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கிவிடுவார்களாம்! கூறுகிறார் பெரியார் கூச்சம் சிறிதும் இன்றி! கழகத்தை, **விலைக்கு வாங்கும் ஒரு பொருளாகக்** கருதுகிறார்! கழகம் நம்முடைய இருதய கீதம்! கழகம் நம்முடைய இலட்சிய பூமியை அடைய நாம் பெற்ற பேறு! கழகம், நம்முடைய ஊனில், உடலில், உயிரில் இரண்டறக் கலந்துபோன ஓர் தத்துவம்! ஆனால் பெரியார் கூறுகிறார், கழகம் விலைக்கு வாங்கக்கூடிய ஒரு பொருள் என்று! பெரியார், கழகத்தை, எவ்வளவு அலட்சியமாக, எவ்வளவு அனாவசியமாக, எவ்வளவு துச்சமாக, எவ்வளவு கேவலமாக மதிக்கிறார் என்பதற்கு இந்த மூன்று சொற்களே போதும் சான்று.

கத்தரிக்காய்—விலைக்கு வாங்கும் பொருள்! சீனா பொம்மை—விலைக்கு வாங்கும் பொருள்! பேனா, பென்சில், புத்தகம்—விலைக்கு வாங்கும் பொருள்! வாங்கலாம், விற்கலாம் இவற்றை, தப்பில்லை. ஆனால் கழகம்! அதுவும் இவற்றைப் போல விலைக்கு வாங்கும் பொருளாமே! பத்திரிகையில் இந்த மூன்றுசொற்களைக் கண்டபோதே நம் உள்ளம் இரத்தக் கண்ணீர் சொரிகிறதே, கழகத்திற்கு இவ்வளவு பெரிய அவமானத்தையா ஒரு தலைவர் சூட்டுவது என்பதை எண்ணி நம் உடல் பதைக்கிறதே, நம்நரம்புகள் துடிக்கின்றனவே, பெரியார் மட்டும் எப்படி மனம் துணிந்து— இவற்றை எழுதினார்—நம்மால் உணர்ந்து பார்க்கவே முடியவில்லையே! இப்படியெல்லாம், கழகத்தை, நம் மாற்றாரும் சொல்லக் கூசும் அளவுக்கு அவமானப்படுத்திவிட்டு, அதை கேவலம் விலைக்கு வாங்கும் ஒரு பொருளாக எழுதிவிட்டு, இதற்குப் பெயர்தான் "விளக்கம்" என்று வேறு கூறுகிறாரே பெரியார்! இன்னமுமா விளக்கம் தேவை என்று கேட்கவும் செய்கிறாரே! என்னென்பது இந்த விபரீதத்தை! இவ்வளவு துச்சமாக அவர் கழகத்தை மதிக்கிறார் என்பது தெரிந்தபிறகும் கூட ஒரு கைவல்யம், ஒரு வேதாசலம், ஒரு குருசாமி அவர் பக்கம் நிற்க "தயார்" கூறுகிறார்களே! என்னென்பது இந்தக் கொடுமையை!

"இன்னமுமா விளக்கம் தேவை? என்கிறார் பெரியார். ஆம், அவர் கேட்பது முற்றிலும் சரியே! இன்னமும் ஏன் விளக்கம்? இன்னும் என்னதான் இருக்கிறது விளக்க? கழகத்தை அவர் எவ்வளவு கேவலமான நிலையில் மதிக்கிறார் என்பதைக்கூடத்தான் இவ்வளவு வெளிப்படையாக எழுதி, இவ்வளவு தெளிவாக விளக்கிவிட்டாரே! இன்னமும் அவர் எதை விளக்க முடியும்? எனவேதான் கூறுகிறார் இன்னமுமா விளக்கம் தேவை என்று! நியாயந்தானே அவர் கூறுவது!

1. நம் அனைவரின் விருப்பத்திற்கும் மாறாகவும், அவரும் நாமும் இத்தனை ஆண்டுகளாகச் செய்து வந்த பிரசாரத்திற்கு நேர் முரணாகவும் 72 வயதுப் பெரியார் 30 வயது மணியம்மையை மணந்து கொண்டார். இதன்மூலம் கட்சிக்குப் பெருத்ததோர் இழிவை, அவமானத்தை உண்டுபண்ணினார்.

2 தான் நம்பக் கூடியவர்கள் கட்சியில் யாரும் இல்லை என்று கூறியதோடு நில்லாமல் நான் நம்பக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்—நீங்கள்தான் கூறுங்களேன் என்று நம்மையே கேட்டதன் மூலம் நம் உள்ளத்தில், அவர் தன் நாவினால் சுட்ட வடு என்றென்றும் மறையாத தன்மை வாய்ந்தது.

3. இவருடைய பொருந்தாத் திருமண ஏற்பாட்டைக் கண்டு உள்ளம் குமுறி வேதனைக்குரல் எழுப்பிய அத்தனை பேரையும் விஷமிகள்—எதிரிகள் — சதிகாரர்கள்—உளறிக் கூத்தாடுபவர்கள்—உஷாராகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள்—சுயநலமிகள் என்றெல்லாம் கூறியதன் மூலம் அவர்களை அவமானப்படுத்தியிருக்கிறார்.

4. நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் இத்திருமண ஏற்பாட்டைப் பற்றி யோசிக்க நாளை கூடுகிறார்கள் என்றால் இன்றே திருமணத்தை ரகசிய ரகசியமாகச் செய்து கொண்டதன் மூலம் கமிட்டியையே அவர் அவமானப்படுத்தியிருக்கிறார்.

5. கடைசியாக, கழகத்தை, விலைக்கு வாங்கக்கூடிய ஒரு பொருள் என்று சித்தரித்ததன் மூலம் கழகத்தையே அவமானப்படுத்தியிருக்கிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

மாந்திரீகக்காரியான வேதநாயகியம்மாளல்ல. மேன்மை பொருந்திய எனது...

உங்களை ஏமாற்றுவதுதான் கடைசி. வருந்த வேண்டாம், என்னை "முண்டைச்சி" யாக்கி, நீங்கள் சுகமனுபவித்ததற்கோக நமது குடும்ப நகைகளை நானே போட்டுக் கொள்ளுவேன்.

மாந்திரீகத்தின் உண்மை சொரூபம், ஏமாற்றந்தான், என்பது சிலரது வாதம், அது பொய். மாந்திரீகர்களுக்கும், ஜோசியர்களுக்கும் எப்பொழுதுமே லாபம் உண்டு. அனுபவத்தில் நீங்களும் கண்டுவிட்டீர்கள்; இது ஒரு நல்ல பாடம்! எங்களைத் தேட முயற்சிக்க வேண்டாம். அது வீண் ரகசியம், கடைசியாக என்னை வாழாமல் வாழ வைத்த உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தங்கள், **பார்வதி**

ரெட்டியார் "திரு திரு"வென்று விழித்தார்! அவர் முகத்திலே அசடு நிறைந்து வழிந்தது, ஆத்திரம்! ஏமாற்றம்! வெறுப்பு! துக்கம்! சோகம்! எல்லாம் அங்கு, குதித்துக் கும்மாள மடித்தன.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கோபம் கொதித்தெழுந்தது. என்ன செய்வான் பாவம், நாக்கில்லை, பேச; மற்ற ஆண்டிகளோ "ஏதோ தெய்வானுக்கிரகம் இல்லாமலா; நாக்கிழந்ததும் இவனுக்கு இவ்வளவு நல்ல கதி கிடைத்தது" என்று மயங்கி, அவர்களும் காலில் வீழ்ந்து கும்பிடத் தொடங்கினர். சீமான் தவிர மற்றவர்கள், தன்னை ஓர் அவதாரமாகவே கருதுவது கண்ட பஞ்சைக்கு மிகுந்த சோகம் உண்டாகி, சீமானின் சூதுக்கு உடந்தையாக வாழ்வதற்காக, உயிரை வைத்துக் கொண்டிருப்பதை விட, இறப்பதே மேல் என்ற துணிவு பிறந்துவிட்டது. ஒரு நடுநிசியில், மனோவேதனை அதிகப்படவே, கூரிய கத்திகொண்டு, தற்கொலை செய்துகொண்டு இறந்தான்.

சீமான், புரண்டழுதான், ஊரே கோவெனக் கதறிற்று. இன்னமும் கொஞ்ச நாட்களுக்கு நாக்கிழந்தார் இருக்கக் கூடாதா? நாடு சீர்படுமே, என்று "பக்தர்கள்" கை பிசைந்தனர். கண் பிசைந்தனர். மடம் கட்டப்பட்டு, படம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, சீமான், கோபாலசாமி கோயில் தர்மகர்த்தா வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு, மடத்தின் அதிபரானார். ஆண்டுதோறும் நாக்கறு விழா நடைபெறுகிறது, சீடகோடிகளின் காணிக்கை குவிகிறது. எங்கே? என்று கேட்பீர்கள்!

பெரும் புளுகு என்றுரைப்பீர்கள்! கட்டுக்கதை என்று பேசுவீர்கள்! இஷ்டம்போல் எண்ணிக் கொள்ளுங்கள்.

* * * *

சென்ற வாரத்திலே, சுதேசமித்திரன், வடநாட்டிலே ஏதோ ஓர் கோயிலிலே, ஒரு வாலிபன், தெய்வபக்தி காரணமாகத் தன் நாக்கை அறுத்துக்கொண்டான் என்றோர் செய்தியை, பக்தி சிரத்தையுடன், பரோபகார சம்ரட்சணார்த்தம் வெளியிட்டதல்லவா. அந்தப்பக்தன், ஏன் தன் நாவைத் துண்டித்துக் கொண்டானோ எனக்குத் தெரியாது, ஆனால், நான் தீட்டியுள்ள கதையில்வரும் பஞ்சைபோன்றவர்கள் நாக்கைத் துண்டித்துக் கொள்ளத் தயங்கவும் மாட்டார்கள். சூதுசூட்சி தெரிந்தவன், நாக்கிழப்பவனைக் கொண்டு பணம் திரட்டவும் கூசான், நாடு அவன் கட்டிவிடும் கதையைக் கேட்டு ஏமாறவும், பொருள்தரவும், தயாராகத்தான் இருக்கிறது என்று நான் சொன்னால் நீங்கள் சிரிப்பீர்கள், ஆனால் சிந்தனைக்கு வேலைதந்தால், "ஆம்" என்றே கூறுவீர். மூடநம்பிக்கையில் ஊறிக்கிடக்கும் இந்நாட்டிலே இதுபோன்ற சூதர்களுக்கும், சாமியாடிகளுக்கும், அற்புதங்கள் நடத்துவோருக்கும் இன்றும் ஆதிக்கம் நிரம்ப இருக்கிறது. இல்லாமலா பகிரங்கமாக, சில ஆண்டுகளுக்கு முன்னால் வடலூர் இராமலிங்கர் வரப்போகிறார், செத்தவரைப் பிழைப்பிக்கப் போகிறார் என்று எவனோ ஓர் ஏய்த்துப் பிழைப்பவன் பிரச்சாரம் செய்யவும், பணம் வசூலிக்கவும் துணிந்தான், அதற்குத்தாளந்தட்ட ஓர் திருக்கூட்டம் கிளம்பிற்று! எங்கேயடா, வள்ளலார்? என்ன ஆயிற்று நீ சொன்ன சூளுரை? ஏன் இப்படி ஊரை ஏய்த்தாய்? ஏன் நம்பிக்கை மோசடி செய்தாய்? எங்கே வசூல் செய்த பணம்? என்று யார்போய் அந்த உண்டிகுலுக்கியைக் கேட்டார்கள். அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு இதுபோல் ஓடுபவர் ஆண்டுக்கு ஒருவர் இருவர் தோன்றுகிறார்கள். என்றாலும், எத்தனை முறை ஏமாந்தாலும், மூடத்தனத்திலே ஊறிப் போனவர்களுக்கு பித்தம் குறைவதில்லை. இந்த நாட்டுக்கு விமோசனம் உண்டா? இன்று நாம் உட்கார்ந்திருக்கும் அறையிலிருந்து கொண்டு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இலண்டன், வாஷிங்டன், மாஸ்கோ, சிட்னி, நெட்டால், ஆட்டவா, போன்ற தூரநகரங்களிலே நடைபெறும் பேச்சையோ, இசையையோ அங்கே நடைபெறும் போதே கேட்டு இன்புறுகிறோம்.

இதை அதிசயம், அற்புதம், என்று இந்த மூடமதியினர் கூறுவதில்லை.

"ஒரு அதிசயம் தெரியுமா? நமது ஊருக்கு ஓர் சாமியார் வந்திருக்கிறார். அவர் சாப்பிட்டு பத்துவருஷமாச்சாம் அவர் விபூதி மந்திரித்து கொடுத்தால் தீராத வியாதியே கிடையாதாம்." என்று பேசுவர்.

அவனுக்குக் குணமாகவில்லையே! இவனுக்குப் பலன் கிடைக்கவில்லையே என்று ஆதாரங்காட்டிப் பேசினாலோ, "அது அவன் எழுத்து" என்று கூறிடுவர்.

ரேடியோ, கம்பியில்லாத் தந்தி, வானவூர்தி, சப்மெரைன், டெலிவிஷன், என்றுஎந்த அற்புதக் கண்டுபிடிப்புபற்றி வேண்டுமானாலும் கூறிப் பாருங்கள், தலையாட்டுவார்களே தவிர, மறுபடியும், மாரி கோவில் பூஜாரி குறிசொல்லும் அதிசயம், சாமியாடி மந்திரித்துக் கொடுக்கும் எலிமிச்சையால் கரு உண்டாகும் அற்புதம், நாக்கில் வேல் குத்திக் கொண்டவனின் மகிமை, என்ற இவைகளையே பிரமாதமாகப் பேசுவர். பாமரர் பேசினாலும் பரவாயில்லை. படித்தோம் என்று நாவசைக்கும் கூட்டத்திலும் சிலர் இத்தகைய நாக்கிழந்தார் வாக்கிழந்தார், நோக்கிழந்தார், பெருவழியார், சிறுவழியார் என்று ஏதேதோ "மகான்களை"த் தேடிக் கொண்டும் தெந்தினம் பாடிக்கொண்டும் இருக்கின்றனர். இந்தப் பித்தம்போக மருந்துண்ணாதவரையில், நாடு, நயவஞ்சகருக்கு வேட்டைக் காடாகவே இருந்து தீரும். வாலிபர்கள் விரைந்தெழுந்து இத்த வீணர்களை அடக்கா விட்டால், வாழையடி வாழையென்றிருந்து விட்டால், எதிர்காலத்திலே இந்நாட்டைக்காட்டுமிராண்டிகளின் கூடமென்றநாகரிக மக்கள் கருதி, எள்ளி நகையாடுவர்.

இத்தகைய மூடக்கோட்பாடுகளைத் தகர்க்கப் பிரசாரம் புரிய முன்வரத் துணியாதவர்களை, நான் நாக்கிழந்தார் என்றே கூறுவேன். அவர்கள் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலே நாவுக்கரசர்களாக இருக்கலாம். ஆனால் நாட்டை அரித்துவரும் இந்த மூடநம்பிக்கைகளைக் கண்டிக்க முன்வராத வரையில், நான் அவர்களை, நாக்கிழந்தார் என்றே கூறுவேன், அது தவறுமல்ல!

## ஏஜண்டு தேவை

மதுரை, கும்பகோணம் ஆகிய இடங்களில் போர்வாள் விற்பனை செய்ய முன் பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை இன்றே எழுதவும்.

மானேஜர்.

சிறுகதை :

# மாந்தரீகப் பெண்

"ஜே. பி. கண்ணன்"

" காளியூர் " என்பது சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு சிறிய கிராமம். அவ்வூருக்குப் பெரியதனக்காரர் தோழர் ராமலிங்க ரெட்டியார். காளியூருக்கு அவரே " சர்வாதிகாரி" என்றுகூடச் சொல்லலாம், அவ்வளவு நல்லசெல்வாக்கு. ரெட்டியார் நல்லவர்தான், இருந்தாலும் ஒரு முரட்டு சுபாவம், படிப்புக் குறைவு!

நல்ல மனிதர்களையும் "மதப்பித்து" பொல்லாதவர்களாக்கி விடுகிறது என்பது அனுபவ உண்மை. அமெரிக்க் முதலாளிகட்கு பொதுவுடமைக் காரர்களைக் கண்டால் எப்படியோ அப்படித்தான் சுயமரியாதைக்காரர்களைக் கண்டால் ரெட்டியாருக்கு!

காளியூருக்கு ஒரு மாந்திரீகப் பெண் வந்து சேர்ந்தாள், சிறு வயதினள் மிக்க அழகி. தன் வீட்டைத் தேடி வந்த அந்த மாந்தரீகப் பெண்ணால், தனக்கு ஒரு பெருமையும், கௌரவமும் கிடைத்து விட்டதாக ரெட்டியாருக்கு சந்தோஷம்!

அவளுக்குச் சாப்பாடு முதல் சகல வசதிகளும், தன் வீட்டிலேயே, உற்சாகமாகச் செய்து கொடுத்தார். பழைய காலத்துப் பார்ப்பன வாத்தியாரிடம் பாடங் கேட்கும் "அல்லாத" சிறுவனைப் போல் பணிவாக நடந்து கொண்டார் ரெட்டியார் அந்தப் பெண்ணிடம்.

மாந்தீரீகப் பெண்ணிடம் உண்மையில் ஒரு "சக்தி" இருந்தது. ஜோசியம், மாந்திரீகம் இவைகளை எதிர்ப்பவருங்கூட நேரில் பார்த்த பின், அவளுக்குப் பரிந்து பேசுவார்கள். காரணம் அவள் மிக்க அழகியோடுங்கூட, ஆளுக்குத் தகுந்தமாதிரி இனிமையாகப் பேசும் ஒரு படித்த பார்பனத்தி.

நாட்டில் நிலவும் பெண்கள் சுதந்திரக் கிளர்ச்சி முதல், சியாங்—கே—ஷேக் வீழ்ச்சி வரையிலும், சகல விஷயங்களையும் அவளிடம் கேட்டுக்கொள்ளலாம். பொதுவாக அவள் ஒரு கதம்பப் பூச்செண்டு போல்விளங்கினாள். அவள் பெயர் வேதநாயகி யம்மாள்.

வந்து 3 நாளாயிற்று. தன்னுடைய மாந்தரீக மாயா விநோத சக்திகளைக்காட்ட சந்தர்ப்பத்தை நோக்கியிருந்த மாந்திரீகப் பெண்ணுக்கு ஒரு நல்ல வேட்டை! ராமலிங்க ரெட்டியாரின் இளைய சகோதரி பார்வதிக்குப் பேய் பிடித்த மாதிரி ஒருவிதப்பைத்தியம் உண்டு. அது இப்பொழுது அதிகரித்துவிட்டது. அது "பேயின் சேஷ்டைதான்" என்று எல்லோரும் முடிவு கட்டினர்.

தக்க சமயத்தில் மாந்திரீகப் பெண் வந்திருப்பது ரெட்டியாருக்குச் சந்தோஷம்! உடனே பார்வதியை அவளிடம் ஒப்புவிக்கப் பட்டது.

பார்வதி ஒரு பாலிய விதவை. வயது 19. உடலுரம் பெற்ற ஒரு சிறந்த அழகி. இருந்தாலும் அவளுக்கு 'இன்ப வாசல்' அடைப்பட்டுவிட்டது! சமூகம் அவளைக் கொல்லாமல் கொல்லுகிறது! இன்ப நுகர்வின் ஆர்வம்! மீறும் உணர்ச்சி! இவைகளுக்கு எருவிட்டதைப் போன்ற சில வாலிபர்களின் காமப்பேச்சும்!கடைக்கண் வீச்சும்! அவள் மனதைப் பிய்த்துப் பிடுங்கியது. கடவுளால் இந்து சமூகத்துக்கருளப்பட்ட 'விதவைக் கோலம்" அதை ஜெயிக்க முடியவில்லை. மாற்ற முடியவில்லை.

அவள் புத்தி பேதலித்து விட்டது என்னென்னமோ பேசினாள், என்னென்னமோ செய்தாள். தனக்குப் "பேய் பிடித்துவிட்டது" என்று சொல்லுவதைக் குறித்து பார்வதி வருந்தவில்லை. ஆனால் தன்னைப் பிடித்துள்ள "பேய்" இன்னதுதான், அது இம்மாதிரியெல்லாம் துன்புறுத்தும், என்பதுபாழும் இந்து சமூகத்தின் நெஞ்சில் உறைக்கவில்லையே! என்றுதான் கண்ணீர் வடித்தாள்,

நள்ளிரவு. ரெட்டியார் வீட்டின் தனி அறை. கணீர்! கணீர்! என்று மணியோசை ஒலித்தது. உடுக்கையும், சிலம்பமும் முழங்கிற்று. சாம்பிராணியும், குங்குலியமும் புகைந்தது. எருக்கம் பூ, அரளிப்பூக்களின் வாசம் நாசியைத் துளைத்தது. திடீரென்று ஓ ஓ...... என்ற ஒரு சப்தம் ஓங்காரமிட்டது! மாந்திரீகப் பெண்ணின், மந்திர உச்சாடனமும், அதட்டும் குரலும், ஆர்ப்பாட்டமும்ஊர்ப்பெண்களின் குசு குசுப் பேச்சுகளும, கதம்ப வாசங்களும், அறையிலிருந்து காற்றோடு கலந்து வந்தது.

வளர்த்துவானேன், பேய் ஓட்டுவதற்குச் செய்யும், சம்பிரதாயங்களெல்லாம், அங்கு ஆடம்பரமாக நடைபெற்று ஓய்ந்தது. இது 4-வது நாள். இப்படியாக இன்னும் 16 நாளைக்கு ஓட்ட வேண்டுமாம். இதிலொரு விசேஷம்! தினசரிப் பேயாட்டம் முடிந்தவுடன் பார்வதியும், மாந்திரீகப் பெண்ணும், அந்தத் தனி அறையிலேயே படுத்துக் கொள்வார்கள்.

அந்தப் பேய் ரொம்பக் கெட்டது, பார்வதிக்கு ஏதாவது கேடு விளைவித்து விடுமாம், அதற்கு மாந்திரீகப் பெண் பாதுகாப்பு!

பேயோட்ட ஆரம்பித்தது 10 நாட்களாகி விட்டது. பார்வதி வர வர சுகமடைந்து வந்தாள். பேயும் கொஞ்சம் கொஞ்சமாகப் போகத் தொடங்கியது. இதற்குள் மாந்திரீகப் பெண்ணுக்கு நல்ல பெயர்! காளியூரிலும், சுற்றுப் புறங்களிலும் ஏராளமான பிரக்யாதி! தகுந்த இடங்களிலிருந்து அழைப்புகள்! சன்மானங்கள்! புகழ் மாலைகள்! வந்து குவிந்தன!

"ராமலிங்க ரெட்டியாருக்கு இன்னும் தான் செய்யவேண்டிய ஒரு 'பெரிய உபகாரம்' உண்டு அதற்குப் பிறகுதான், மற்றவர்களது விஷயங்கள் கவனிக்கப் படும்" என்று மாந்திரீகப் பெண் தன்னை அழைத்தவர் களுக்குத் திருவாய்மலர்ந்தருளினாள்.

அந்த விஷயம் வெளியில் சொல்லக்கூடாத ரகசியம்! பெரிய மனக் கோட்டையின் சிகரம்!

நிற்க, பேயோட்டக்குறித்த 20 நாட்களும் சென்றது. பேயும் ஓடி விட்டது! பார்வதி இப்பொழுது உற்சாகம் நிறைந்த ஒரு புதிய பெண்ணாகத் தோற்றுகிறாள். அவள் அழகு பன்மடங்கு பிரகாசித்தது! உடல் பூரித்தது மனம் சாந்தியும், சமாதானமும் பெற்றது அவள் முகத்திலே சந்தோஷம்.

கலந்த ஒரு இனிய புன்னகை! நிர்மாணிக்கப்பட்ட எதிர்காலச் சந்தோஷ வாழ்க்கையை எண்ணி எண்ணி மனமகிழும் ஒரு புது மணப் பெண்போல விளங்கினாள் பார்வதி.

மாந்திரீகப் பெண் ரெட்டியாருக்குச் செய்யும், அந்தப் "பெரிய உபகாரம்" ரெட்டியாரின் புழக்கடையிலே ரகசியமாக ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்கள் கழிந்தது இன்னும் ஒரே ஒரு நாள் தான்! அது பூர்த்தியடைந்தால் ஹா! ரெட்டியார் எவ்வளவு செல்வந்தராகி விடுவார்! எவ்வளவு பவுன்கள்! எத்தனை வைர ஆபரணங்கள்! எத்தனைத் தங்கநகைகள்! நாணயங்கள்! அத்தனையும் நினைக்க, நினைக்க ரெட்டியாரின் மனம் பூரிப்பால் வெடித்துவிடும் போலாகி விட்டது.

அன்றுதான் கடைசிநாள்! நடுநிசி! வானத்திலே வெண்மேகக் கூட்டங்கள்! சந்திரன் அமுத கிரணங்களை அள்ளி வீசினான்! எங்கும் பால்போன்ற நிலவொளி! மாந்திரீகப் பெண்ணின் உத்தரவுப்படி, ரெட்டியார் வீட்டுப்பெண்கள் அணிந்திருந்த சகலவித ஆபரணங்களையும் கழட்டி அவளிடம் கொடுக்கப்பட்டது. அவைகளைப் புதையலுக்குப் பக்கத்திலே, தற்காலிகமாகப் புதைத்து, புதையலை எடுக்கும்போது சேர்த்து எடுத்துக் கொள்வதாம்! புதையல் தேவதைக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவது, என்பது அதன் சித்தாந்தம்.

சகலவித பூஜா திரவியங்களும் குவிந்து கிடந்தது. பலியிடுவதற்கு ஒரு கறுப்பு ஆடு கட்டப்பட்டிருந்தது. கைகட்டி, வாய் பொத்தி, பயபக்தியுடன் ரெட்டியார் குடும்பம் சூழ்ந்து நின்றது. எங்கும் நிசப்தம்.

மாந்திரீகப்பெண் சொன்னாள்:—

ரெட்டியாரே! நீங்களெல்லாம் இனி இங்கிருக்கவேண்டாம், இந்தப் புதையலைக் காப்பது மகா துஷ்ட தேவதை! அதை வசப்படுத்த அதனுடன் போராடவேண்டும்! அந்தப் பயங்கரக் காட்சியை பார்த்தால் நீங்கள் செத்துப் போவீர்கள்! ஜாக்கிரதை! ஞாபகமிருக்கட்டும். காலை ஆறுமணிக்கு மேல், நான் கூப்பிடும் வரையில் இந்தப் பக்கம் யாரும் தலைநீட்ட வேண்டாம்! போங்கள், அதுவே தேவ வாக்கு!

விடிய, விடிய ரெட்டியார் ஆசையோடு விழித்திருந்தார். குடும்பத்திற்கே அன்று ஏகாதசி! ஆறுமணி ஆயிற்று. புழக்கடையிலே எந்த சப்தத்தையும் காணோம். ரெட்டியார் புதையலைப் பார்க்கத் துடிப்பாய்த் துடித்தார்! மணி ஏழு, எட்டு, ஒன்பது என்று ஓடியது! அவரது ஆவல் கரைபுரண்டு விட்டது. பளிச்சென்று மனதில் ஒரு சந்தேகமும் தோன்றியது! முகத்திலே ஏமாற்றம் வழிந்தோட புழக்கடயை நோக்கி நடந்தார்! திடுக்கிட்டு அப்படியே அசைவற்று நின்றுவிட்டார்!

என்ன ஆச்சரியம்! மாந்திரீகப் பெண் தோழர் வேதநாயகி அம்மையார் அவர்களே அங்கில்லை:! கழுத்தறுபட்ட ஆடும், பூஜா திரவியங்களும், சிதறிக் கிடந்தது. எல்லாம் ஒரே பாழாகத் தோன்றியது! புதையல் குழிக்கருகே சென்றார். அந்தக் குழியைத் தோண்டப்பட்டது, அங்குப் புதைத்த நகைகள் அடியோடு காணப்படவில்லை ஆனால் மூன்றடி ஆழத்தின் கீழே ஒரு செப்புத்தவலை கிடைத்தது. மீண்டும் மனசில் தோன்றிய ஆசையோடு ரெட்டியார் அதன் மூடியைத் திறந்தார். அவர் பார்த்தவைகள் என்ன? பவுன் குவியல்களா? தங்க நகைகளா? நாணயங்களா? வைர ஆபரணங்களா? இல்லை, இல்லை, அவைகளைப் போன்றே பித்தளையால் செய்யப்பட்டு, முலாம் பூசப்பெற்ற போலி ஆபரணங்கள்! போலி வைரங்கள்! போலி பவுன்கள் !!

ஆனால், அத்துடன், ஒழுங்காகத் தன் விலாசமிடப்பட்ட ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது.

ரெட்டியாரின் நெஞ்சின் மேல், ஒரு பெரிய பாராங்கல், விழுந்த மாதிரி இருந்தது! அவரது மனக்கோட்டை "தபதப" வென்று சரிந்து விழுந்தது, ஒன்றும் தோன்றாமல் அப்படியே சோகத்தோடு சாய்ந்துவிட்டார்.

ரூபாய் 9000 பெறக்கூடிய நகைகள்! ரெட்டியாரின் குடும்பம் இரண்டு நாளாகப் பட்டினி! இத்துடன் விட்டதா!

"பார்வதியைக் காணோம்!" என்ற செய்தி ரெட்டியாரின் வைதீகப்பச்சை இரத்தத்தையே துடிக்கச் செய்துவிட்டது! நன்றிகெட்ட கடவுள்கள்! பக்தர்களுக்கு இவ்வளவு பயங்கரச் சோதனையா? நாஸ்திகம் வலுத்துவிடும் என்ற யோசனை கொஞ்சங்கூட இல்லையே! எதிர்காலத்தில் இந்தக் கடவுளெல்லாம் எப்படித்தான் பிழைக்குமோ தெரியவில்லை!

"அந்தக் கடிதம்" ஆம்! அது பார்வதியின் எழுத்துப் போன்றிருந்ததே! மறந்தே விட்டேன்! என்று சொல்லிக்கொண்டே கடிதத்தை எடுத்துவந்து பிரித்தார். மனசுக்குள்ளே படித்தார்.

அன்னை தங்கள் பார்வதி வணக்கம்!

மன்னிக்கவும், தாங்கள் ஏமாந்துவிட்டீர்கள்! மாந்திரீகப் பெண்ணை இன்னுங்கூட ஒரு பெண்ணென்றுதான் நம்பியிருப்பீர்கள். அவள் ஒரு அழகிய பிராமண வாலிபன்! வேஷதாரி! கொள்ளைக்காரன்! மத பக்தர்களை, மாந்திரீகப்பிரியர்களை மட்டந்தட்டும், சாமர்த்தியம் வாய்ந்த படிப்பாளி!

அவரை, என்னைப் பிடித்த பேயை ஓட்டுவதற்கு நியமித்தீர்கள், கட்டளையை நிறைவேற்றினார்! கொடிய 'வைதவ்யப்' பேயை ஓட்டியதுடன், என்னையும் ஆட்கொண்டு விட்டார். 20 நாட்களாகத் தனி அறையில் என் அன்பரோடு இன்பத்தின் எல்லை கண்டேன்! புத்துயிர் பெற்றேன்! விதவைக்கு வாழ்க்கையில்லை, இன்பமில்லை, சுகமில்லை, நல்ல உணவுமில்லை, அதுதான் தலைவிதி, பிரம்மன் கட்டளை, என்ற ஜீவகாருண்யமற்ற நமது இந்து மதக் கோட்பாடுகளைவிட, கொடியவன், வஞ்சகன், பொய்க்காரனாகிய எனது காதலன் எவ்வளவோ சிறந்தவன்! மேலானவன்!

எங்கள் இரு மனசும், உடலும், ஒன்றுபட்டுவிட்டது, கல்யாணம் என்ற "கூத்து" எங்களுக்குத் தேவையில்லை. என் வேண்டுகோளுக்கு அவர் இசைந்து விட்டார், அவருக்கு கௌரவமாக சம்பாதிக்க வழி தெரியும் இனி அவர்

(9-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)